<u>சி.சி.44/2018</u> <u>தேதி: 19-01-2021</u>

**<u>அ.சா.2. கலைசெல்வன் வயது 40, த/பெ, கோட்டீஸ்வரன், அருணபதி கிராமம்.</u>**

**<u>சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.</u>**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1-னு எனது அம்மா ஆவார். கடந்த 04-02-2018-ம் தேதி ஞாயிற்று கிழமை மாலை எனது தந்தை கோட்டீஸ்வரன் இருசக்கர வாகனத்தில் எனது அம்மா வனஜாவை கதவாணி பஸ் நிறுத்ததில் இருந்து அழைத்து வர சென்று திரும்பி வரும் போது மாலை 4.50 மணிக்கு அருணபதி கூட்ரோடு அருகே வந்துக் கொண்டு இருந்த போது, அவருக்கு பின்னே வந்த மினி டெம்போ இருசக்கர வாகனத்தில் மோதி விட்டதாக அங்கு இருந்தவர்கள் போன் மூலம் எனக்கு தகவல் சொன்னார்கள். நான் சுமார் 5.00 மணிக்கு சம்பவயிடத்திற்கு வந்து பார்த்தேன். எனது தந்தைக்கு தலையில் அடிப்பட்டு இருந்தது. மூக்கில், காதில் இரத்தம் வந்து சுய நினைவு இல்லாமல் இருந்தார். எனது அம்மாவுக்கு கை, கால் சீராய்ப்பு காயம் இருந்தது. அதன் பிறகு சிகிச்சைக்காக தனியார் வாகனம் மூலம் ஊத்தங்கரை அரசு மருத்துவ மனைக்கு அழைத்துச் சென்றோம். மருத்துவர் எனது தந்தை உடலை பரிசோதித்து அவர் இறந்து விட்டதாக கூறினார். எனது அம்மா மருத்துவ மனையில் சிகிச்சை பெற்றார். விபத்திற்கு காரணம் அதிகவேகமாக வந்த டெம்போ தான் காரணம். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை:</u>**

எதிரிக்கு வாய்ப்பு கொடுத்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

**ஓம்./ திரு.பா.திருஞானசம்பந்தம், பி.ஏ., பி.எல்.,**
**குற்றவியல் நீதித்துறை நடுவர்,**
**ஊத்தங்கரை.**